# யாழ். பிராந்திய புலிகள் தளபதி லெப். கேணல் ராதா வீர மரணம்


விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY


மலர் 29 வைகாசி 7 றம்ழான் 22 இதழ் 90

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 21-5-1987


யாழ்ப்பாணம். வியாழன், கட்டுவனில் நேற்று இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற நேரடி மோதலில் முன்னாள் மன்னார் பிராந்திய தளபதியும் தற்போதைய யாழ். பிராந்திய தளபதியுமான லெப்ரினன்ட் கேணல் ராதா (ஹரிச்சந்திரா) வீரமரணமடைந்தார்.

யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவரான இவர் 1983ம் ஆண்டில் தமது இயக்கத்தில் சேர்ந்து குறுகியகாலத்தில் ஒரு பிராந்திய தளபதியாக பொறுப்பேற்ற முதலாவது போராளி என்று விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

(6-ம் பக்கம் பார்க்க)



## இயக்கச்சியில் பொம்மர் தாக்குதலில் 12 பேர் பலி, 45 வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், வியாழன். இயக்கச்சி பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற பொம்மர், ஹெலி தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் பன்னிரெண்டுபேர் கொல்லப்பட்டதாகவும் நாற்பத்தைந்து வீடுகள் முற்றாக சேதமாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கடந்த சில தினங்களாக ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து யாழ். குடாநாடு நோக்கி நகரமுற்பட்டுவரும் இராணுவத்தினரை அங்கிருந்து வெளியேறாதவாறு போராளிகள் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து நேற்று முன்

(5-ம் பக்கம் பார்க்க)

பொம்மர்கள், ஹெலிகள் உதவியுடன் நாலு முகாம்களிலிருந்து வெளியேறிய

# இராணுவத்தை எதிர்த்து போராளிகள் கடும் தாக்குதல்

## இழப்புடன் படையினர் முகாம் திரும்பினர்

யாழ்ப்பாணம், வியாழன்

**வசாவிளான், குரும்பசிட்டி, கட்டுவன், தொண்டமனாறு ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து நேற்று வெளியே வந்த ஆயிரத்துக்கு மேலான படையினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் படையினர் தரப்பில் பலர் கொல்லப்பட்டதுடன் சிலர் காயமுமடைந்தனர். மேலும் முன்னேற முடியாத இராணுவத்தினர் தமது இழப்புகளுடன் முகாம் திரும்பினர்.**

புலிகள் தரப்பில் யாழ் பிராந்திய தளபதி உட்பட இருவர் வீரமரணமடைந்தனர். மூவர் சிறு காயங்களுக்குள்ளாகினர்.

நேற்றுக்காலை ஒரே நேரத்தில் இம் முகாம்களிலிருந்து வெளியே வந்த படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பல மணிநேரம்நேரடி மோதல் இடம்பெற்றது.

இம் மோதலின்போது இராணுவத்திற்கு உதவியாக பொம்மர் விமானங்களும், ஹெலிகொப்டர்களும் புலிகளை எதிர்த்து தாக்குதல் நடத்தியதுடன் இராணுவ முகாம்களிலிருந்தும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

தொண்டமனாறிலிருந்து வெளியே வந்த படையினரை வளலாயில் வைத்து புலிகள்

(6-ம் பக்கம் பார்க்க)

## இரத்தம் தேவை

யாழ்ப்பாணம், வியாழன்

"யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கியில்சகல குறூப்களையும் சேர்ந்த இரத்தம் தேவைப்படுவதால் இரத்ததானம் செய்யவிரும்புவோர் உடனடியாக வைத்தியசாலை இரத்தவங்கியுடன் தொடர்பு கொள்ளவும்."

இவ்வாறு வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியகலாநிதி சி. என். நச்சினார்க்கினியன் வேண்டுகோள் விடுத்துள்ளார். [வா]

## குடாநாட்டை கைப்பற்ற இலங்கை மற்றுமொரு தாக்குதல்

சென்னை, மே 20

யாழ்.குடாநாட்டை கைப்பற்றுவதற்கு இலங்கை இராணுவம் மற்றொரு பக்கியமான தாக்குதலை தொடங்கியிருப்பதாக தமிழ்ப் போராளிகள் சென்னையில் தெரிவித்துள்ளனர்.

தீவிர பயிற்சிபெற்ற இராணுவத்தினர் கப்பல் மூலம் வல்வெட்டித்துறையில் இறக்கப்பட்டுள்ளதுடன் யாழ். குடாநாட்டிலுள்ள இராணுவ

(5-ம் பக்கம் பார்க்க)

## யாழ். வைத்தியசாலையின் பாதுகாப்புபலப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், வியாழன்: யாழ் போதனா வைத்தியசாலையின் பாதுகாப்பு நடவடிக்கைகள் வைத்தியசாலை உயரதிகாரிகளால் நேற்றிலிருந்து பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் திறந்துவிடப்பட்டிருந்த ஆஸ்பத்திரியின் விக்ரோறியாவீதி வழியிலான நுழைவாசல் நேற்று பூட்டப்பட்டிருந்தது ஆஸ்பத்திரியின் முன்பக்கவாசல்களால் மட்டுமே நோயாளர்களும் பார்வையாளர்களும் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்கு ஆஸ்

(5 ம் பக்கம் பார்க்க)

## வீர வணக்கம்

யாழ்ப்பாணம். வியா.

மக்களை பாதுகாக்கும் நோக்குடன் நேற்று இராணுவத்துடன் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த லெப். கேணல் ராதாவுக்கும், லெப். கோணேசுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (ஓ)

அச்சுவேலியில்

## 11 பேர் பலி, 16 பேர் காயம் 10க்குமேற்பட்ட வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், வியா.

வளலாய், இடைக்காடு, பத்தைமேனி, அச்சுவேலி, நவக்கிரி, கதிரிப்பாய், தம்பாலை ஆகிய பகுதிகளில் நேற்று இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சு, ஹெலித்தாக்குதல், இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூடு ஆகியவற்றுக்கு இலக்காகி 13 வயதுச் சிறுவன் ஒருபெண் உட்பட 11 பேர் கொல்லப்பட்டனர். 16 பேர் காயமடைந்தனர் பத்துக்கு

[6-ம் பக்கம் பார்க்க]

கட்டுவன்

## பொம்மர், ஹெலி தாக்குதலில் ஒருவர் பலி, பலர் காயம்

### ஆஸ்பத்திரி, வீடுகள், பாடசாலைகள் சேதம்

[பலாலி நிருபர்]

கட்டுவன், குரும்பசிட்டி, வசாவிளான் மினி இராணுவ முகாம்களிலிருந்து நேற்றுக் காலை இராணுவத்தினர் வெளியே வர முற்பட்டபோது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் பொது மக்களில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர்.

(5-ம் பக்கம் பார்க்க)

## காயமடைந்தோர்

பலாலி, புதன்

கட்டுவன், குரும்பசிட்டி, வசாவிளான் ஆகிய இராணுவ மினி முகாம்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் காயமடைந்தோர் விபரம்

செல்வமாணிக்கம் அற்புதம் [பெண்] [வயது 60] வறுத்தலைவிளான், செல்வமாணிக்கம் கலா (வயது 26) வறுத்தலைவிளான், செல்வமாணிக்கம் கலைச்செல்வி

(6-ம் பக்கம் பார்க்க]

உரும்பராயில்

## விமானக் குண்டுவீச்சு: நாலு வீடுகள் பலத்த சேதம்

[உரும்பராய் நிருபர்]

உரும்பிராயில் பொதுமக்கள் வாழும் பகுதியில் நேற்று நண்பகலும், மாலையும் பாரிய அளவிலான பொம்மர், ஹெலி தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நான்கு பொம்மர்கள், ஒரு ஹெலி, ஒரு அவ்ரோ விமா

[6-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஆசிரியர் தேர்வுப் பரீட்சைக்குரிய 'பொது அறிவு', 'பொது உளச்சார்பு' நூல்கள் விற்பனையாகின்றன. விலை: 25/-. க. குணராசா (எம். ஏ) ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலைகளில் கிடைக்கும். [சி-9179]

பிரம்பு ஹோல் செற், புதிய Sony 20'' கலர் T. V. 2092 M. E., தேக்கு அலுமாரிகள், மேசைகள், கட்டில்கள், கதிரைகள், Tovel Rack Fan, சைக்கிள், Floor Polisher புதிய குளிர்சாதனப் பெட்டி, Electric Cooker with Oven, சாப்பாட்டு கதிரை மேசை மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு. பத்மநாதன், பிறிபற்றி சேவிஸ், திருநெல்வேலி வடக்கு. [சி-9183]

திருமண அழைப்பிதழ்களும் திருமண வாழ்த்துமடல்களும், திருமண ஆண்டு நிறைவு வாழ்த்து மடல்களும், பிறந்த நாள் வாழ்த்து மடல்களும், சகல விலைகளிலுமான முத்திரைவகைகளும், வான் கடித உறைகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ள; அரஸ் ஜவுளியகம், 146, நவீன சந்தை யாழ்ப்பாணம். தொலைபேசி: 24001. (சி 9146)

Sanyo Stand Fan, வீடியோ லயிற், நஷனல் வீடியோ மிக்ஷர், செற்றி, குழந்தைகளின் பாவனைப் பொருட்கள் மற்றும் பலவகையான வீட்டுப் பொருட்கள் விற்பனைக்குண்டு. 45, பழம் ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி-9197)

வெள்ளைநிற சார்லி மோட்டார் சைக்கிளும், துவிச்சக்கர வண்டியும் விற்பனைக்குண்டு. விலாசம்: 116, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (சி-9191)

போக்குவரத்து தடை காரணமாக 22ந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கவிருந்த Hisex பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் Hy-Line [ஹை-லைன்] பேட்டுக்குஞ்சுகள் 29-ந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராசா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில் (சி-9200)

## தவறிவிட்டது

சிஸ்ரர் மேரி கொஸ்கா, திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை மற்றும் வேலை அடையாள அட்டை (கிளி/புனித பற்றிமாறோமன் கத்தோலிக்க வித்தியாலயம், உருத்திரபுரம்) என்பன யாழ். ஆஸ்பத்திரி வளவுக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [சி-9198]

செ. பரமநாதன் ஆகிய எனது சைக்கிள் மல்லாகம் செல்வம் வீடியோ சென்ரர் முன்னால் மாற்றப்பட்டுள்ளது. எனது சைக்கிள் நடபர் D L 53708 (றலி) கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொண்டு மாற்றவும். செ. பரமநாதன், அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பழை. (சி-9193)

## வகுப்புக்கள்

108, Brown Rd, Jaffna A/L 88 சேதன இரசாயனம். ஆசிரியர்; சத்தீஸ், (Organic) ஆரம்பம்: 23-05-87 சனி 6-15a m. (சனி, ஞாயிறு 6-15 a. m.) [சி-9199]

## பயிற்சிகள்

றேடியோ, ரெலிவிசன் வீடியோ டெக் கூடியநேர செய்முறையுடன் குறைந்த கட்டணத்தில் பயிற்சியளிக்கப்படுகின்றது. பயிற்சிகளில் உடன் சேரலாம். விபரங்கட்கு: எலக்ரோ டெக்னிக்கல் இன்ஸ்டியூசன், கல்வளை, சண்டிலிப்பாய். [சி 9167]

## வகுப்புக்கள்

வெளிநாடுகளில் பிரபல்யமான தொழில்வாய்ப்புக்கல்வி Telex Operators (International) (இருபாலாரும்) றேடியோ ரெலிவிசன், எலக்றிக் வயறிங் ஆரம்பம் 23-5 87 டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும் Electros. Thirunelvely Junction). சி-9131

Radio-TV, Air Conditioning - Refrigeration, வெல்டிங், வயறிங், மோட்டர் மெக்கானிசம், வைன்டிங், பிளம்பிங், தட்டெழுத்து, சுருக்கெழுத்து மனையியல்கலை, தையல், Icing புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன சான்றிதழ் பெறுமதியானது. Vispa Engineering Aid Hall (ஆனைப்பந்திக்கு அருகாமையில் 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் சி-9150

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில்

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சொத்தறுதியில்லாது காலஞ்சென்ற காரைநகர் புதுறோட், சேச் ஒழுங்கை சங்கரப்பிள்ளை வேலுப்பிள்ளையின் மரணச் சொத்துக்கள் தொடர்பிலான விடயம் சம்பந்தமாக

—காலஞ்சென்றவர்.

சங்கரப்பிள்ளை வேலுப்பிள்ளை கைம்பெண் அன்னபூரணம், சேச் ஒழுங்கை, புதுறோட், காரைநகர் வடக்கு.

—மனுதாரர்.

வழ. இல: தத்து/ 118

எதிர்:

1. நிர்மலா வேலுப்பிள்ளை (பராயமற்றவர் தனது வழக்குப் பாதுகாவலரான கீழேபெயர் உடைய 2ம் எதிர் மனுதாரர் சங்கரப்பிள்ளை குணநாயகம் மூலம் தோற்றுகின்றார்.) சேச் ஓமங்கை, புதுறோட், காரைநகர்.
2. சங்கரப்பிள்ளை குணநாயகம், களபூமி, காரைநகர்.

—எதிர்மனுதாரர்கள்.

மேலே பெயர் குறிக்கப்பட்ட காலஞ்சென்றவரின் சொத்தறுதியில்லா மரணச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் மேலே காட்டப்பட்டு இலக்கங்கொண்ட வழக்குத் தொடரப்பட்டு மனுவிற் கோரியதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால்அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1987 ம் ஆண்டு வைகாசி மாதம் 27ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதமன்றத்தில் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

1987ம் ஆண்டு வைகாசி மாதம் 15ந் திகதி ஊர்காவற்றுறையில்.

நீதிமன்றக்கட்டளைப்படி
**சு. வ. கணேசன்**
பதிவாளர்,

வரைவ:
**எஸ்.ஏ.ஈ.ஏகநாதன்,**
மனுதாரின் சட்டத்தரணி
(சி-9188)

## முக்கிய அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

**காணமற்போன நடுக்கட்டு உத்தியோகத்தர் பற்றுச் சீட்டுப் புத்தகம் இல: 41 (பற்றுச் சீட்டிலக்கங்கள் 2001 முதல் 2050 வரை) அடங்கியவை**


நடுக்கட்டு உத்தியோகத்தரால் அறவிடப்படும் சோலைவப் பணத்திற்கு வழங்கப்படும் பற்றுச் சீட்டுகள் 2001 முதல் 2050 வரை (புத்தக இல:41) காரியாலயத்திலிருந்து காணமல் போய்விட்டது ஆகவே இத்தொடரிலக்க பற்றுச் சீட்டுக்கள் செல்லுபடியாகாது என்பதனை இத்தால் கலருக்கும்அறியத்தருகின்றேன்

ஆகவே வரியிறுப்பாளர்கள் செலுத்தும் பணத்திற்கு வழங்கப்படுய பற்றுச் சீட்டுக்களைப் பெறும் பொழுது குறிப்பிட்ட இலச்கங்கள் கொண்டனவா என்பதனை சரிபார்ப்பதுடன் இவ்விலக்கம் கொண்ட பற்றுச் சீட்டுக்கள் எவருக்கும் வழங்கப்பட்ருப்பின் உடன் சோலைவரிப் பகுதியுடன் தொடர்பு கொள்ளும் வண்ணம்கேட்டுக் கொள்கின்றேன்

**சீ. வீ. கே. சிவஞானம்,**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம். (ஏ-013)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**ஞானமூர்த்தி பொன்னுத்துரை**

மலர்வு: 30-05-1916
உதிர்வு: 21-04-1987

அந்தியேட்டி:
21-05-1987

எமது குடும்பத்தின் வழிகாட்டியாய் இருந்து எம்மையெல்லாம் ஆறுத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எமது குடும்பத் தலைவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

21-05-1987-ல் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மனைவி, மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்.

68, கலட்டி அம்மன்வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 9'89)

## ஒத்திவைப்பு

**அறவழிப் போராட்டக் குழுவினால்**
ஒழுங்கு செய்யப்பட்ட
"பாலர் கல்வியில் ஆக்கப்பொருள் சாதனம்"
எனும் தலைப்பிலான

### பொருட்காட்சி

22-ம், 23 ம் திகதிகளில்
நடைபெறமாட்டாது என்பதனை
அறியத்தருகின்றோம்.

(சி 9207) — அறவழிப்போராட்டக்குழு.

## KEEN CENTRE

88. பலாலி றோட், திருநெல்வேலி.

**89 A/L 2 வதுபிரிவு**

| | |
|---|---|
| தூய/பிரயோககணிதம் | — திரு. ஈசன் |
| விலங்கியல் | — திரு. நாகநாதன் |
| தாவரவியல் | — திரு. சர்வானந்தா |
| பௌதிகம் | — திரு. சத்தியசீலன் |
| இரசாயனவியல் | — திரு. சத்தீஸ் |

ஆரம்பம் 23-05-87 சனி மாலை 4-30 மணி
எ-3879

## KEEN CENTRE

88, பலாலி றோட், திருநெல்வேலி.

**89 A/L 2 வதுபிரிவு**

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. வரதராஜன் |
| கணக்கியல் | — திரு. வன்னியசிங்கம் |
| வர்த்தகம் | — திரு. ரட்ணம் |
| அளவையியல் | — திரு. S. S மனோகரன் |
| தமிழ் | திரு. குழந்தை |
| இந்துநாகரிகம் | — திரு. பாலா |
| [illegible]ரசயல் | — திரு. மசனெல்ட் |
| புவியியல் | — திரு. சண் |

ஆரம்பம் 23-05-87 சனி மாலை 4 மணி
எ-3878

## பிரயாண ஒழுங்குகள்

**லண்டன், நோர்வே, பெல்ஜியம் (ஜேர்மனி, பிரான்ஸ் செல்வோர்)**

மேற்படி நாடுகளுக்குச் செல்லவிரும்புவோர் காலதாமதமின்றித் தொடர்பு கொள்ளவும். பிரயாணம் நிச்சயம்.

**கனடா:** சிறிது தாமதமாகப் பிரயாணம் செய்யத் தயாரானவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புக்கான முகவரி:

**க. செல்வநாயகம்**
ஸ்ரீ சாந்திநிகேதன்
வளாக ஒழுங்கை (பலாலி வீதிப்பக்கம்),
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(சி 9133)

## இடமாற்றம்

### ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ

பிடவை ஸ்தாபனம் தற்போதைய
சூழ்நிலை காரணமாக
இல. 424, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்
(பன்றிக்கோட்டு பிள்ளையார் கோவில் முன்பாக,
வீடியோ பிரசாத்துக்கு அருகாமையில்)
இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை
எமது வாடிக்கையாளர்களுக்கு
அறியத்தருகின்றோம்.

பங்காளர்கள்.

[சி-9151]

### மணிவாக்கு

அறிவினுள் எல்லாம் தலையென்பதீய
செறுவார்க்கும் செய்யாவிடல்
—குறள்.

[பிறன் இழைத்த தீமையை நீ பொறுத்துக் கொண்டால் தீமையின் சந்தானம் அத்துடன் தீர்ந்துபோகும்.]

## நமதுநோக்கு

# மூத்த குடிகளுக்கு மூடுவிழா

குடிகள் அஞ்சத்தக்க வற்றைச் செய்யுங் கொடுங் கோலரசன் விரைவிற் கெடுவது நிச்சயமென்கிறது தமிழ் மறை. ஆனுல் வள்ளுவரும் தன்னை உலகினுக்களித்த தமிழ் நாட்டையே உயிருடன் விழுங்கிவிட இலங்கையரசு உத்தேசிக்கிறது

தமிழ்நாட்டு முதலமைச்சர் இலங்கைத் தமிழருக்கு நிதி உதவ முன்வந்தமை தமிழரை முறியடிக்கும் இலங்கையரசின் போர்த்திட்டத்திற்கு மாறுனது மட்டுமல்ல, சர்வதேச சட்ட மரபுக்கு முரணுனது என்று முழக்கப்படுகிறது.

இன்று யாழ்ப்பாணமே திட்டமிடப்பட்ட இப்போரின் கேந்திர நிலையம் யாழ்ப்பாணச் சரித்திரத்தைஇன்று தமது தாயகத்தையும் அதன் கௌரவத்தையும் பாதுகாக்கப் போராடும் தமிழ் இளைஞர்கள் அறிந்திருக்கமாட்டார்கள்.

அவ்வித பழமையின் பெருமை பேசுபவர்கள் இன்றும் பேசிக்கொண்டேயிருப்பது இளைஞரின் வெறுப்பைச் சம்பாதிக்கும் செயலன்றி இன்றைய நிலையில் போராளிகளுக்கு உத்வேகமளிக்கவோ அல்லது பொது மக்களுக்குத் தென்பூட்டவோ உதவாது.

1958ல் தங்கள் தென்னிலங்கை இருப்பிடங்களையும் தொழிலையும் விட்டு தரைப் பிரயாணம் அபாயமென்பதால் கடற் பிரயாணத்தில் பிறந்த பொன்னுடு ஓடிவந்த பெற்றேரே இன்றைய போராளிகளின் இன்ப அனுபவம்.

சுமார் முப்பது வருடங்களின் பின் இலங்கைத் தமிழர் வரலாற்றில் நிலையற்ற மாற்றங்கள் காணப்பட்டன. தென்னிலங்கை திரும்பும் தமிழ்க் கூட்டத்தினர் குறைந்ததும், வெளிநாடுகளில் பாதுகாப்பாகத் தொழில்தேடும் கூட்டத்தினரே அதிகரித்து வந்தனர்.

இன்றைய ஆட்சி 1983 ஆடிக் கலவரம் உலக சாதனையைக் குறிப்பிடும் 'கின்னஸ்' புத்தகத்தில்இடம் பெறுவதை எதிர்பார்க்கவில்லை. உலக வெறுப்பைத் தேடித்தந்த இந்தக் கலவரம் இன்று தமிழர் பிரச்னையைத் தேசிய பிரச்னையாகவும், இந்தியாவின் சொந்தப் பிரச்னையாகவும், அதற்கு மேலாகஉலக வல்லரசுகள் கடைக்கண் சாற்றவல்ல சர்வதேசப் பிரச்னையாகவும் வளர்ந்துவருகிறது.

தினசரி ஒன்று தீட்டிய தலையங்கம் கூறுவதுபோல் இன்று இப்போரின் பாக்கி யாழ்ப்பாணத்தில் பச்சைக் கொடி காட்டுவதைக் காத்திருக்கிறது.

அபாயம் இல்லை, பயணத்தில் தொடரலாம் என்பதே பச்சை விளக்குக் காட்டுவதின் அர்த்தம். அபாயம் இரத்தத்தின் சிவப்பு நிறமென்பதை எவரும் அறிவர்

இலங்கை இராணுவத்தின் சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறவேண்டுமானுல் நாட்டின் பழங்குடி மக்கள் வாழும் யாழ்ப்பாணத்தை ஒழித்துக்கட்டுவது அவசியம். அதற்குரிய ஆயத்தம் பூர்த்தியாகிவிட்டதாகச் செய்தி.

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டும் பயணத்தில் தொடரும் இலங்கை இராணுவம் எத்தனை செய்திகளில் உண்மை காண்கிறது? இந்த வாழ்வே பொய்யென்ற அடிப்படையில் தொழிற்படுகிறது.

அண்மையில் ஐந்துநாள் அடுத்தடுத்து யாழ்ப்பாணத்தை விமானத்திலிருந்து தாக்கியபோது நானூறு பயங்கரவாதிகள் 'வலையில்' அகப்பட்டனராம். இப்பகுதியில் இவ்வித மீனவ சாதனை உண்மையானுல் இன்று ஆயத்தமாகும் பாரியதாக்குதலில் யாழ்ப்பாணம் அரசின் ஜனநாயக ஆட்சிக்குள் மீண்டும் வருமென்பது நம்பிக்கை.

'பொதுமக்கள்பெருமளவில் மடிவது தவிர்க்கமுடியாது; எங்குதான் அது நடக்கவில்லை? பஞ்சாப்பின் பொற்கோவில், வியட்நாம், லண்டன், ஹம்பேர்க், பெர்லின்- இங்கெல்லாம் என்ன நடந்தது' என்கிறுர் ஜே.ஆர்.

துயரமும் தயக்கமும் நிறைந்த கூற்று இதுவென்பது குழந்தைக்கும் விளங்கும்.

யாழ்ப்பாணத்தை, நிலத்திலும் நீரிலும், அகாயத்திலும் வெற்றி கொண்டால் பேச்சுவார்த்தை என்று போல் இழுபறிப்படவேண்டியதில்லை புலிகள் பூனைகள் போல் குந்திக்கொள்வார்கள் என்ற படம்'அக்ஸ்போர்ட்' பண்பாட்டில் ஊறிய பாதுகாப்பு அமைச்சருக்கு உண்டு.

எத்தனை படங்கள்சிதைந்ததை தம் மனக்கண்ணுல் கண்ட இப்பே(ா)ரமைச்சர் இன்று சக்கரவர்த்தி நெப்போலியனின் அந்தஸ்தை எட்டி நிற்பதே இத்துன்பியல் நாடகத்தின் கடைசிக்கட்டம்.

ஆனையும் —ஐ.தே. ஆனை உட்பட - அறுகம் புல்லில் அடிசறுக்கும் அறுகம்புல்லில்லாத இடம் யாழ்ப்பாணத்தில் எங்கும் இல்லை. விநாயகரை வழிபடும் கூட்டத்தினர் — இந்நாட்டின் பழங்குடி மக்கள் - சிங்கள மக்களுக்கே விநாயக வழிபாட்டின் வலிமையை அறிமுகப்படுத்தியிருக்கின்றனர். இந்தப் போர் விக்கினம் எங்கு உண்டு என்பதை விநாயகவழிபாட்டில் ஊறியிருப்பவர் அறிவர்.

சமூகத்தின் கௌரவத்தை நிலைநாட்டத் தம் உயிரை அர்ப்பணித்த போராளிகள் நூற்றுக்கணக்கில்; பொது மக்கள் பல்லாயிரம்; இதிலும் மிகப்பெரிய தியாகம் இன்று உயிருடன் இருப்பவர்கள் — தங்கள்கணவனை, தந்தையை, தாயை, சகோதரங்களை இழந்து தவிக்கும் அதேவேளையில், இனியாவது மானத்துடன் — வெறும் தீர்மானத்துடனல்ல— வாழத் துடிக்கின்றவர்.

யாழ்ப்பாணத்தில் பிறந்தவர்கள் புல்லுருவிகள்அல்ல. பச்சோந்திகள் சிலர் இருக்கலாம். யாழ்ப்பாணம் தமிழரின் பொற்றுலி — அது போனுல் எல்லாம்போம்! இன்று இதனை உணராதவர் எவருமுண்டா?

---

கொழும்பிலிருந்து — பெஞ்சமின் இராஜரட்ணம்

## இனநெருக்கடியினுல் தமிழ் மாணவரின் பல்கலைக்கழக இடங்களும் பறிபோகின்றன

நாட்டின் இனப்பிரச்னையால் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடிநிலை தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது இன விகிதாசார அடிப்படையில் 18 6 சதவீத அனுமதி கிடைக்க வேண்டிய தமிழ் மாணவர்களுக்கு இம்முறை 17 88 சதவீதமே கிடைத்துள்ளது. அதேவேளை 7 சதவீத அனுமதி கிடைக்கவேண்டிய முஸ்லிம் மாணவர்களுக்கு 8.5 சதவீதம் கிடைத்துள்ளது. இந்நிலை ஏற்படுவதற்கு பல்கலைக்கழக அனுமதி கோரி விண்ணப்பித்த தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தமையே காரணமென பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவரும், உயர்கல்வி அமைச்சின் செயலாளருமான டாக்டர் ஸ்ரான்லி கல்பகே அண்மையில் நடத்திய பத்திரிகையாளர் மாநாடொன்றில் தெரிவித்துள்ளார்.

மேலும் யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய சூழ்நிலை காரணமாக யாழ். பல்கலைக்கழக வைத்திய பீட மாணவர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. இதுபற்றிக் கருத்துத் தெரிவித்த டாக்டர் கல்பகே தற்போதுள்ள நிலைமையில் மாணவர்கள் அங்கு கல்விகற்க விரும்பவில்லையெனத் தெரிவித்தார். யாழ். பல்கலைக்கழக வைத்தியபீட நிலைமையைக் குறித்துரைத்த அவர் தமிழ் மொழிமூலம் கல்விகற்ற, கூடியளவு மாணவர்களை அங்கு அனுமதிக்கப்படவேண்டியது அவசியமெனக் குறிப்பிட்டார்.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி யாழ். பல்கலைக்கழக வைத்தியபீடத்திற்கு 15 முஸ்லிம் மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

இந்நாட்டின் இனப்பிரச்னை தொடர்ந்து நீடிக்குமானுல் தமிழ் மாணவர்களின் கல்வி நிலை மிக மோசமடைவதுடன் அவர்களுக்கென அதுவும் குறைந்தளவில் இனவிகிதாசார முறையில் ஒதுககப்படும் உயர்கல்விக்கான இடங்கள் பாதிக்கப்படும் என்பதை டாக்டர் கல்பகேயின் கூற்று ஊர்ஜிதம் செய்கின்றது

அப்பத்திரிகை மாநாட்டில் டாக்டர் கல்பகே பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக வெளியிட்ட விபரங்கள் பின்வருமாறு;

மொத்தம் 6 208 மாணவர்கள் இவ்வருடம் பல்கலைக்கழகங்களுக்கான அனுமதிக்குத் தெரிவாகியுள்ளனர். இவர்களில் 1,110 பேர் தமிழ் மாணவர்கள். 525 பேர் முஸ்லிம் மாணவர்கள். மொத்தம் 16 879 மாணவர்கள் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தனர்.

சனத்தொகை அடிப்படையில் ஏழு சதவீதமே கிடைக்கவேண்டிய முஸ்லிம் மாணவர்களுக்கு 8 5 சதவீதமும், 18 6 சதவீதம் கிடைக்கவேண்டிய தமிழ் மாணவர்களுக்கு 17 88 சதவீதமே கிடைத்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக வைத்தியபீட மாணவர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் தற்போது உள்ள நிலைமையினுல் அங்கு வெளியிடங்களில் இருந்து சென்று மாணவர்கள் கல்விகற்க விரும்பவில்லை. ஆயினும், தமிழ் மொழிமூலம் கல்விகற்ற கூடியளவு மாணவர்களை அங்கு சேர்ப்பது அவசியமாகிறது.

இம்முறை பதினைந்து முஸ்லிம் மாணவர்களுக்கு யாழ் பல்கலைக்கழக வைத்தியபீடத்தில் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது ஆனுல் அவர்கள் அந்த அனுமதியை ஏற்றுக்கொள்வார்களா என்பது சந்தேகத்திற்குரிய விடயமாகவே உள்ளது.

கடந்தவருடம் முஸ்லிம் மாணவர்கள் தமக்குக்கிடைத்த யாழ். பல்கலைக்கழக அனுமதியை மறுத்து எதிர்ப்புத் தெரிவித்தனர் ஆயினும் பின்னர் அந்த அனுமதியை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். ஆனுல் இம்முறை அவர்களை அங்கு அனுப்புவது கஷ்டமாக இருக்கும். யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி மூலமே கல்வி கற்பிக்கப்படுகிறது. எனவே தமிழ்மொழி மூலம் கல்விகற்ற மாணவர்களை மாத்திரமே அங்கு சேர்க்கமுடியும்.

அகில இலங்கை புள்ளி அடிப்படையில் [illegible] மருத்துவ பீடங்களுக்கு 50 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர். அவர்களில் 10 பேர் தமிழர். எஞ்சியோர் சிங்களவர்.

பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி சனத்தொகை அடிப்படையில் இடம்பெறவேண்டுமென சில சிங்கள முஸ்லிம் அரசியல் வாதிகள் வலியுறுத்தி வருகின்றனர். ஆனுல் அந்த அடிப்படையில் பல்கலைக்கழகங்களை நிர்வகிக்கமுடியாது சர்வகட்சி மாநாட்டில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நான் இதனைத் தெளிவாக எடுத்துக் கூறினேன்.

பேராதனைக்கு தமிழ் மாணவர்கள் கூடுதலாகத் தெரிவு செய்து அனுப்பப்பட்டாலும் கண்டனம் தெரிவிக்கின்றனர்.

மருத்துவபீடங்களுக்கு இம்முறை அனுமதிக்கப்பட்ட 486 மாணவர்களில் தமிழ் மொழிமூலம் கல்வியைத் தொடர்ந்த 97 மாணவர்கள் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அடுத்த வருடத்துக்கான பல்கலைக்கழக அனுமதியில் மாற்றங்கள் கொண்டுவருவது குறித்து ஆராய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஒன்பது பேர்கொண்ட குழுவொன்றை நியமிக்க இருக்கிறது. இந்தக் குழு பொதுமக்களின் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளும். தற்போது அகில இலங்கை ரீதியில் தகுதிஅடிப்படையில் 30 சதவீதமும் மாவட்ட மக்கள்தொகை அடிப்படையில் 65 சதவீதமும், பின்தங்கிய 5 மாவட்டங்களிலிருந்து 5 சதவீதமும் என்ற அடிப்படையில் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படுகின்றனர். இவ்வாறு டாக்டர் கல்பகே தெரிவித்தார்.

---

## புதிய நூல் கொள்வனவுக்கு ரூபா 10 ஆயிரம் நிதி ஒதுக்கீடு

[பண்டத்தரிப்பு நிருபர்]

பண்டத்தரிப்பு பட்டின பொதுசன நூல் நிலையம் புனரமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கும் பயனுள்ள வகையில் செயல்பட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

புனரமைக்கப்பட்ட நூல் நிலையத்தின் திறப்பு விழா அண்மையில் பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஏ. சி. இராசதுரை தலைமையில் நடைபெற்றது.

திரு. இராசதுரை அங்கு உரையாற்றுகையில் சகல ஆங்கில, தமிழ் தினசரி பத்திரிகைகளும் மற்றும் தமிழ்நாட்டு சஞ்சிகைகள் உட்பட பலநூல்களும் இந்த நூல் நிலையத்தில் இடம்பெற்றிருப்பதாகவும், இவற்றைப் பொது மக்களும், பாடசாலை மாணவர்களும் நன்கு பயன்படுத்த முன்வர வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் நூல் நிலையத்திற்கு புதிய நூல்களை கொள்வனவு செய்ய பத்தாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்

திறப்பு விழாவில் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அதிபர் வி. நாகராசா, பிரான்பற்று கலைமகள் வித்தியாலய அதிபர் சி. குணரத்தினம், பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஏ. வி. துரையப்பா, பண்டத்தரிப்பு விழிப்புக்குழுத் தலைவர் ஏ, எஸ். செபரத்தினம் ஆகியோரும் உரையாற்றினர்கள்.

---

## சமய அறிவு போட்டி

யாழ்ப்பாணம், வியாழன்.

கொக்குவில் கிருபாகர சிவப்பிரமணிய சுவாமி கோயில் பரிபாலன சபை சைவ சமய அறிவுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

மேற்படி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு இப்போட்டி எதிர்வரும் 7-06-87 அன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறும். இப்போட்டி குறித்த மேலதிக விபரங்களை கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பரிபாலனசபை செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## பிரஜைகள் குழு தந்தி

பருத்தித்துறை, புதன்

"யாழ். போதனு வைத்தியசாலையை உடனடியாக மூடுமாறு ஸ்ரீலங்கா ஜனுதிபதி ஜே ஆர். ஜயவர்த்தனு உத்தரவிட்டிருப்பது தமிழினத்திற்கு மேற்கொள்ளப்படும் கொடூரமாகும். இந்த மனிதாபிமானமற்ற கொடூரமான நடவடிக்கை குறித்து இந்திய அரசாங்கம் தலையிட்டு தமிழீழ தமிழினத்திற்கு விமோசனம் வழங்க வேண்டும்."

இவ்வாறு கோரும் அவசர தந்தியொன்றை பருத்தித்துறை பிரஜைகள் குழு இந்தியத்தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றுக்கு அனுப்பி வைத்துள்ளது.

# பிஜியில் இந்தியர்களுக்கு எதிராக சுதேசிகள் கலகம்!

சுவா, மே–20

**பிஜித்தீவின் தலைநகரான சுவாவில் இந்தியர்களுக்கு எதிரான கலகங்கள் ஆரம்பமாகியுள்ளன. பிஜியில் கடந்த வியாழக்கிழமை ஆட்சிக் கவிழ்ப்பு இடம்பெற்ற பின்னர் நிகழ்ந்த இந்தியர்களுக்கு எதிரான முதலாவது கலகம் இதுவெனத் தெரிவிக்கப்பட்டது.**

பதவி கவிழ்க்கப்பட்ட திரு. ரிமோஸிபவத்ரா தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்து சுவா நகரின் மைதானமொன்றில் இந்தியர்கள் திரண்டுநின்றனர்.


அவ்வேளை பிஜியின் மகா தேசாதிபதி, பிஜியின் நிர்வாகம் மீண்டும் தம்வசமாகியுள்ளதென்றும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட பிஜி பிரதமரும், அமைச்சர்களும் விடுதலை செய்யப்பட்டு விட்டதாகவும் அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்தே பிஜி சுதேசிகள் இந்தியர்களைத் தாக்கத் தொடங்கினர். சிறிதாக ஆரம்பித்த இத்தாக்குதல் பெரிய அளவில் விரிவடைந்தது.

கற்களாலும், தடிகளாலும், உலோகப் பொருட்களாலும் இந்தியர்கள் தாக்கப்பட்டனர். அவர்களின் வாகனங்களின் கண்ணாடிகள் அடித்துச் சேதமாக்கப்பட்டு தலைகீழாக அவை கவிழ்க்கப்பட்டன.

இக்கலகம் நடைபெற்ற வேளை ஸ்தலத்துக்கு வந்த பொலிஸாரும், இராணுவத்தினரும் கலகக்காரரை உடனடியாக கட்டுப்படுத்த முயற்சிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. நீண்ட நேரத்தின் பின்னரே கலகமடக்கும் நடவடிக்கைகள் மேற் காள்ளப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

உலகச் செய்திகள்



இந்து இளைஞர் கொடித்தினத்தை ஆரம்பித்து வைக்கும் முகமாக கடந்த 15-ம் திகதியன்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் முதல் கொடியை இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. தி. சி. சண்முகலிங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.

## மீரட்டில் இந்து - முஸ்லிம் கலகம் 15 பேர் பலி, 30 பேர் காயம்!

புதுடில்லி, மே. 20.

உத்தரப்பிரதேஷ் மாநிலத்தில் மீரட் நகரில் இந்து- முஸ்லிம் கலகம் வெடித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை இங்கு வழிபாட்டுத் தலமொன்றுக்கு அருகே நிகழ்ந்தகுண்டு வெடிப்பொன்றை அடுத்தே இக்கலகம் ஆரம்பித்தது.

15 பேர் இக்கலவரத்தில் கொல்லப்பட்டுள்ளனர். 30 பேர் காயமடைந்துள்ளனர்.

சுமார் 200 கலகக்காரர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீரட் நகரில் ஏற்பட்டுள்ள இந்து- முஸ்லிம் கலகம் புதுடில்லியின் சில பகுதிகளிலும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

மீரட் நகரிலிருந்து 40 மைல்கள் தொலைவில் புதுடில்லி அமைந்துள்ளது. பொலிசார் உடன்நடவடிக்கைகளில் இறங்கி நிலைமையைக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவந்தனர்.

## இன்றைய பலன்

மாதம்—வைகாசி
திகதி—7 (1987-05-21]
கிழமை—வியாழன்
திதி— நவமி மு. இ. வரை
நக்ஷத்திரம்—சதயம் பி. ப. வரை.

மேடம்:- ஆசாரக் குறைவான சம்பவங்கள் இடம்பெறும், உடல் நிலையில் கவனம் செலுத்தவும், சகோதர வழிச்சுகமும் உண்டு.

இடபம்:- அன்னை வழி ஆதரவு தாராளமாகக்கிடைக்கும், அறிஞர்கள் தொடர்புகளும் பெருகும், பொருள் வரவிற்கும் இடமுண்டு.

மிதுனம்;- கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும், எதையும் சிறப்புடனும் செய்யவிரும்புவீர்கள், சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம்.

கடகம்:- மனதில் அமைதி குன்றும், எதிரிகள் எக்காளமிடுவர், மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும்.

சிங்கம்:- வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும், சுற்றுடலில் உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும், அதிக வருவாய்க்கும் இடமுண்டு.

கன்னி:- தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும், பெரியோரைப்பகைத்துக் கொள்ளலாம், பொறுமையுடன் நடந்து கொள்ளவும்

துலாம்:- பிதாவழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு, தெய்வநம்பிக்கையில் அதிக ஆர்வமேற்படும்.

விருச்சிகம்:- வாழ்க்கையில் தென்றல் வீசும், பெரியவர் ஒருவரின் உதவியும் கிடைக்கும், தெய்வத்தின் துணையுமுண்டு.

தனுசு:-பொன்னான சந்தர்ப்பமொன்று இன்று கிடைக்கும், திறமைக்கு முதலிடம் உண்டு, பெரியவர்களின் ஆதரவும் கிடைக்கும்.

மகரம்:- வாழ்க்கை இன்று மல்லிகைத்தோட்டம் போல் மணம்பரப்பிக் கொண்டிருக்கும், காதல் சிட்டுகளுக்கு சுவையானதினம்.

கும்பம்:- உணவுவிடயத்தில் இன்று கவனம் தேவை, உடல் நலம் பாதிக்கப்படும், உங்கள் செல்வாக்கை பாதிக்கும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

மீனம்:- இலட்சியவாதிகளுக்கு இன்று சிறப்பான தினம், புண்ணிய விருப்புக்கும் இடம்உண்டு. வரவுக்கும் இடமுண்டு.

திருமலை ரவீந்திரன்

நடுத்தர அணு ஆயுதங்களை —

## ஆசியா, ஐரோப்பாவிலிருந்து அகற்ற கோபச்சேவ் முன்வைக்கும் நிபந்தனை

மாஸ்கோ, மே 20.

"ஜப்பான், தென்கொரியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து அமெரிககா அதன் நடுத்தர அணுஆயுத ஏவுகணைகளை விலக்கிக் கொள்ளுமானல் ஆசியா, ஐரோப்பாவிலிருந்து சோவியத்யூனியன் முழு அளவில் தனது நடுத்தர அணுசக்தி ஏவுகணைகளை விலக்கிக்கொள்ளும்" என்று சோவியத் தலைவர் திரு. மிக்கேல்கோபச்சேவ் தெரிவித்துள்ளார்.

சோவியத் யூனியனுக்கு விஜயஞ் செய்துள்ள வியட்நாம் தலைவர் திரு. நியோன்வன்லினைக் கௌரவித்து மாஸ்கோவில் வழங்கிய விருந்துபசாரமொன்றில் திரு. கோபச்சேவ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: "இந்துசமுத்திரப் பிராந்தியம் சமாதான வலயமாக்கப்பட வேண்டும். இங்கு வல்லரசுகளின் எந்த விதமான அச்சுறுத்தல்களும் இருக்கக் கூடாது" என்றார்.

பசுபிக் சமுத்திரத்தில் அனுமதிக்கப்பட்ட எல்லைப்பகுதியை மீறி அமெரிக்கா தனது விமானத் தாங்கிக் கப்பல்களை நிறுத்திக் கொள்வதைத் தவிர்க்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## தூத்துக்குடி, விசாகப்பட்டினத்தில் இந்திய கரையோர காவல்படை தளங்கள்

சென்னை,மே. 20

தூத்துக்குடி, விசாகப்பட்டினம் ஆகிய கரையோர நகரங்களில் இந்தியகரையோரகாவல் படைத்தளங்கள் அமைக்கப்படவுள்ளன.

இத்தகவலை நேற்று இராமேஸ்வரம் வந்திருந்த இந்திய கிழக்குப் பிராந்திய கடற்படைத்தளபதி தெரிவித்தார்.

இந்தியகடல் ஓரகாவல் படைக்கென தலா 6 கோடி ரூபா பெறுமதியான 6 புதிய கப்பல்களும் சிங்கப்பூரில் இருந்து வாங்கப்பட விருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மண்டபம், தனுஷ்கோடி ஆகிய பகுதிகளில் கள்ளக் கடத்தல் நடவடிக்கைகளை முறியடிக்கும் வகையில் அதிவேக ரோந்துப் படகுகளையும் கரைஓர காவல்படை சேவைக்கு அமர்த்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார் இலங்கை இராமேஸ்வரம் ஆகியவற்றின் கடல் பகுதியில் கள்ளக்கடத்தல் முறியடிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்படும் எனவும் அவர் கூறினர்.

## தபால் நிலையம் இடமாற்றம்

பலாலி, புதன்

இராணுவ தாக்குதல் காரணமாக சிலகாலப் இயங்க முடியாதிருந்த குரும்பசிட்டி தபால்நிலையம் தற்காலிகமாக தெல்லிப்பழைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.


# திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான பிரபவ ஆண்டு வைகாசி மாதம் 9ம் நாள் சனிக்கிழமை [23-05-87] காலை 10-30 — 11-36 வரை உள்ள சுபவேளையில்

| மணமகன் | மணமகள் |
|---|---|
| திருவளர் செல்வன் சி. சண்முகநாதனுக்கும் (B. Sc Civil Engineer) Saudi Condre Co Ltd | திருவளர் செல்வி பா. அமிர்தவல்லிக்கும் |

திருமணம் நல்லூர் சிவன் கோவிலில் நடைபெற இருப்பதால் வைபவத்திற்கு வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு சுற்றத்தவர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[தனிப்பட்ட அழைப்பு இல்லை]

இங்ஙனம்

திரு. வ. சின்னையா
[பிரசித்த நொத்தாரிசு]
பாரியாரும்,
குடும்பத்தினரும்.
"சிவபதி"
சங்கத்தானை,
சாவகச்சேரி.

திரு. மு. த. பாலகிருஷ்ணர்
[ஆச்சாரி]
பாரியாரும்.
65, நாயன்மார் வீதி,
நல்லூர்.

[சி-9172]


## பின் போடப்பட்டது

யாழ்ப்பாணம், வியாழன்.

இன்று 21 ஆம் திகதி யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருந்த யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப்போட்டி தவிர்க்க முடியாத இன்றைய கால நிலை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது.


# JAFFNA COLLEGE

STAFF TENNIS CLUB
LUTHER SELVARAJAH MEMORIAL TENNIS TOURNAMENT — 1987
Will be conducted
at the
Jaffna College Tennis Courts
from
Thursday 21 st — Saturday 23 May, 1987.
ALL ARE WELCOME.

Jaffna College,
Vaddukoddai.

L. S. M. T.T. Committee.
[A-014]



# JAFFNA COLLEGE
# WANTED

Trained or qualified teachers for the following:
1. English in the Primary School (Years 1—5)
2. Art preferably with Ceramics for the Middle School (Years 6 — 11)

Apply on forms available in the College office on or before the 6 th June, 1987.

PRINCIPAL.

Jaffna College,
Vaddukoddai.

(A-015)

## "காவாயோஇனி எமைக்கணபதியே"

இணுவை நகருறை இனியநற் கணபதியே
நினதடி நிதம் தொழுது—எழுவோம்
இனநல உயர்வுஅருளி இன்பம் பொங்கி
அனைவரும் உய்ய அருள்.

பஞ்சமுகத்தோனே பானைவயிற்றோனே
நெஞ்சில் நிறைந்துறைநற்—கணபதியே
தஞ்சமென நின்பதம் சரண்புகுந்தோம்
அஞ்சும் நிலைநீக்கி எமைஆள்.

சி. சபாநாதன்
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

[இணுவில் பரராசசேகர விநாயகர் கொடியேற்றம் இன்று நடைபெறுகின்றது]

## விளையாட்டு போட்டி

உடுவில், புதன்

உடுவில் வலய கிராம முன்னேற்ற கழகத்தின் ஆதரவில் எதிர்வரும் ஜூன் மாதத்தில் தாச்சி, மரதன் ஓட்டம், மாட்டுவண்டி, உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுக்கள் நடாத்தப்படவுள்ளன.

இப்போட்டிக்கான கழகங்கள், தனிப்பட்டவர்களின் விண்ணப்பங்கள் மே மாதம் 20ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என தெரிய வருகிறது.

## பிரிவுபசாரவிழா

பருத்தித்துறை, புதன்

யாழ். அபிவிருத்திச் சபை புலோலி உப- அலுவலகத்தில் வருமான மேற்பார்வையாளராகக் கடமையாற்றி சாவகச்சேரி நகரசபை அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்ற திரு. ஐ. கிருஷ்ணருக்கும், தொழில் நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றி யாழ். அபிவிருத்திச்சபை கோப்பாய் உப-அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்ற திரு. எஸ். ஜெயகுமாரபதிக்கும் யாழ். அபிவிருத்திச் சபை புலோலி உப-அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. பெ. கனகசபாபதி தலைமையில் பிரிவுபசார விழா நடாத்தப்பட்டது.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



க. முரளீதரன்
(வல்வெட்டித்துறை)

மலர்வு: 09-12-1961

உதிர்வு: 21-04-1987

கொழும்பு நகரில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எழில் மிகுந்த குணக்குன்றே காந்தி மிக்க உன் வதனத்தில் தவழும் வசீகரப் புன்னகைக்கும் ஆழமான உன் விழிகளில் தெறிக்கும் அறிவின் பிம்பத்திற்கும் காலதேவன் கண்ணி வைத்தானே. நிலையில்லா உலகில் நின் நினைவை என்றும் நிலைக்க வைத்து மறைந்தாயேஎங்கள்கண்மணியே, எங்கள் ஒளி விளக்கின் ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றோம்.

அன்னாரது இறுதிச்சடங்கில் கொழும்பில் கலந்து கொண்ட யாவர்க்கும், அனுதாபச் செய் யனுப்பியவர்களுக்கும் பலவழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எம்நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அந்தியேட்டிக்கிரியைகள் சிலாபம் முன்னேஸ்வரப் பெருமான் ஆலயத்தில் 22-05-87 வெள்ளிக்கிழமை நடைபெறும்.

தந்தை: மு. கந்தசாமி (ஆசிரியன்),
தாய்: க. திரிபுரசுந்தரி,
சகோதரர்கள், சிவகுமார், அமுதன், உமா, மோகன், மாமன்மார், மாமிமார், பெரியதந்தை குடும்பத்தினர், சிறியதாய்மார் குடும்பத்தினர், பேரனார்.

(சி 9196)

## ஓராண்டு நினைவஞ்சலி



செல்வி
ரஜினி பாலசிங்கம்
(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி)

மலர்வு: 27-05-1969

உதிர்வு: 31-05-1986

திதி: 21-05-1987

நீர் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும் எம்கண் முன்னே உமது திருமுகம் பூரண சந்திரன் போல் பிரகாசித்துக்கொண்டே இருக்கிறது.

ஓராண்டென்ன ஆயிரமாண்டுகள் சென்றாலும் நின்முகம் எமது நினைவை விட்டு அகலாது உமது உடல் அழிந்தாலும் உமது ஆன்மா எம்முடன் தினமும் உறவாடிக் கொண்டேயிருக்கிறது

எமது மனக்கண்முன்னே நீர் இருப்பதால் எம்மை பொறுத்த வரையில் நீர் இறக்கவில்லைமறைந்திருக்கின்றீர், அவ்வளவுதான், நாம் இருக்கும்வரை உமது நினைவை எவராலும் அழித்துவிட முடியாது.


ஆத்ம சாந்திக்காக பிராத்திக்கும்:

அப்பா, அம்மா,
தம்பி ரஞ்சித், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

32, பேரின்பநாயகம் லேன்,
சுண்டிகுளி,
யாழ்ப்பாணம்.

(சி 918_)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. ஆர். துரைசிங்கம்
பிறப்பு: 18-01-1930
இறப்பு: 21-05-1984

எங்கள் வாழ்வும் எதிர்காலமும் ஒளிமயமாக வேண்டுமென விரும்பி முயன்ற உங்கள் நினைவு எம் மனதில் என்றும் பசுமையாக இருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவை வணங்கி வேண்டுகிறோம்.

[redacted] மனைவி, மக்கள்,
[redacted] மருமக்கள்,
[redacted] பேரப்பிள்ளைகள்.

"சிருத்",
இருபாலை றோட்,
கோண்டாவில்.

(சி-9169)

## நன்றி நவிலல்



அமரர்
வீரசிங்கம்
தயாளசிங்கம்
(சற்குணம்)

மண்ணில்: 26-03-1951
விண்ணில்: 22 04-1987.

எங்கள் குடும்ப விளக்காக ஒளி வீசிய அமரர் வீரசிங்கம் தயாளசிங்கத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர், சகல துறைகளில் உதவி புரிந்தும், அனுதாபத்துடன் எமக்கு ஆறுதலளித்த உற்றார், உறவினர், நண்பர்கள், லங்கா சிமென்ற் லிமிற்றெட் ஸ்தாபன உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம.

இங்ஙனம்
திருமதி ச தயாள சிங்கம்
மகன் தனுஷன்,
வீரசிங்கம்குடும்பத்தினர்,
சண்முகம்குடும்பத்தினர்,

கந்தரோடை வீதி,
சுன்னாகம்,
21-05-1987.

(சி 9208)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## கட்டுவன

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வறுத்தலை விளான் பகுதியில் ஒரு குடும்பமே பலத்த காயங்களுக்குள்ளானது. பல வீடுகள் பாடசாலைகள், கோவில்கள் நாசமாக்கப்பட்டன

கட்டுவன், குரும்பசிட்டி, வறுத்தலை விளான் பகுதிகளில் 25க்கும் அதிகமான குண்டுகள் வீசப்பட்டன அவ்றோ விமானத்திலிருந்து பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டன இதனால் பல வீடுகள் நாசமாக்கப்பட்டன.

குரும்பசிட்டி பகுதிக்குள் பிரவேசித்த இராணுவத்தினர் சமாதி கோவிலடியில் சிவலிங்கம் இரத்தினம், சோமு, நடராசா ஆகியோரின் வீடுகள் உட்பட பல வீடுகளை எரித்துள்ளனர். அதே இடத்திலுள்ள கற்பக விநாயகர் ஆலயம், விக்கினேஸ்வரா ஆலயம் 'ஷெல்' தாக்குதலினால் சேதமாக்கப்பட்டன.

தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு அருகேயும் ஷெல்கள் விழுந்து வெடித்ததினால் விடுதிகளும், வைத்தியசாலையும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இங்கு அநேக ஷெல்கள் அடுத்தடுத்து விழுந்ததினால் அதிகமான நோயாளர்கள் மயக்கமடைந்தனர்.

பலாலியிலிருந்து அடிக்கப்பட்ட 'ஷெல்' ஒன்று 6 மைல் கலுககப்பால், ப[illegible] வீழ்ந்துவெடித்ததில் இ[illegible] நாயகம் என்பவரின் வீடு[illegible] மானதுடன், அவரும் ப[illegible] காயத்துக்குள்ளானார்.

குரும்பசிட்டி, குப்பிளான் பகுதிகளில் சிலவீடுகள் எரிந்து புகைமண்டலமாகக் காட்சியளிக்கின்றன. (கே)

## இயக்கச்சியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தினம் இயக்கச்சிப்பகுதியில் விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் பெண்கள் உட்பட பன்னிரெண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் பிந்திக்கிடைத்த ஊர்ஜிதமற்ற தகவல்களின் படி முப்பதுபேர் வரையில் கொல்லப்பட்டிருக்கலாமென வும் அஞ்சப்படுகிறது. [சி]

## குடாநாட்டை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முகாம்களில் பல நவீனரக ஆயுதங்கள் குவிக்கப்பட்டுள்ளதாகவும் போராளிகள் மேலும் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு திரு. ஜயவர்த்தன விடுத்துள்ள உத்தரவின் நடவடிக்கை இது என்றும் தெரிவித்த போராளிகள் யாழ்ப்பாணம் கண்டி வீதியில் முகாம் அமைப்பதற்கு இலங்கையரசு திட்டமிட்டு வருவதாகவும் தெரிவித்தனர். (ஒ)

## யாழ். வைத்தியசாலை


(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரியின் உணவுச்சாலையில் இருந்தே உணவுகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

ஆஸ்பத்திரியின் உள்ளே செல்பவர்கள் வைத்தியசாலையின் சேவையாளர்களினால் பரிசோதிக்கப்பட்டபின்பே அனுமதிக்கப்படுகிறார்கள்.

இதுஇவ்வாறிருககவைத்தியசாலையை மூடிவிடுவதென்ற அரசின் தீர்மானம் இருந்தபோதிலும் தற்போது ஆஸ்பத்திரியின் திருத்தவேலைகள் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது (வா)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
ஆ. சி. நடராசா
தோற்றம்: 17-2-1913
மறைவு: 21-4-1987

எமது குலவிளக்காகத் திகழ்ந்து கடந்த 21-4 87 அன்றுஅகாலமரணமடைந்து இறைபதமெய்திய அமரர் ஆ. சி நடராசா அவர்களின் இறுதிக்கிரியைகளில் பலத்த சிரமத்தின் மத்தியிலும் நேரடியாகப் பங்குபற்றியோருக்கும், உடனே வந்து ஆன உதவிகள் அத்தனையும் புரிந்தோர்க்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பி ஆறுதல் பகன்றோர்க்கும் எமது மனமார்நதநன்றியும் வணக்கமும்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்.

5, சங்கிலியன் வீதி,
நல்லூர். (சி 9210)


**லிடோ** யாழ் நகர்
1?-30, 2-30, 4-30, 6-30
**Flash Dance**
(Color)

புதிய வெளியீடு
**வெலிங்டன்** திரையில்
10-30, 2-30, 4-30, 6-30
நவீனரக ஆயுதங்களுடன் பயங்கர சண்டைகள் நிறைந்தது.
Anthony Quinn - James Corburn
Lindsay Wagner in
HIGH RISK
(Colour)


## அறிவித்தல்

### இலங்கை திறந்த பல்கலைக்கழகம் பட்ட மேற்கல்வி டிப்ளோமா 1986/87

மேற்படி கல்வி நெறிக்கு பதிவு செய்துகொண்ட ஆசிரிய மாணவர்கள் யாவரும் 23-05-1987 சனிக்கிழமை காலை 9-0? மணிக்கு யாழ்ப்பாணப் பிரதேசக் கிளை கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரிக்கு தவறாது சமூகம் தரும்படி மாணவர் குழு வேண்டுகின்றது.

மாணவர் குழு.
[சி-9211]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வியாழக்கிழமை 21 5-87

யாழ் குடாநாடு மீதான

# பொருளாதார தடையை விலக்க இந்தியா இலங்கையை நிர்ப்பந்திக்கவேண்டும் - அமிர்'

புதுடில்லி, மே 20

இலங்கை அரசு யாழ்ப்பாணத்தின் மீது விதித்த பொருளாதார தடையை உடனடியாக விலக்கவேண்டும் என்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்த யோசனையை செயல்படுத்தும்படி இந்தியா இலங்கையை நிர்ப்பந்திக்க வேண்டுமென்று த. வி. கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் கேட்டுள்ளார்.

புதுடில்லியில் மத்திய அரசு பிரதிநிதிகளுடன் கடந்த மூன்று நாட்களாக பேச்சு நடத்தியபின் செய்தியாளர்களிடம் பேசுகையிலே இவ்வாறு கூறினர்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது: இலங்கையில் தொடர்ந்து நடைபெறும் இனக்கொலையை இப்போது தடுக்கவில்லையென்றல் இனி எப்போதுமே தடுக்கமுடியாது.

இலங்கையில் இராணுவத் தாக்குதல்களும் பொருளாதார தகவல் தொடர்பு துண்டிப்பும் தமிழர்களை குற்றுயிரும், கொலையுயிருமாக்கிவிட்டது. வெளி உலகத்திற்கு இவர்கள் படும்பாடு தெரியவில்லை.

கடந்த மூன்று நாட்களாக யாழ்ப்பாண குடாநாடு இலங்கையின் இதரபகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினர்; (ஒ)

## அறவழிகண்காட்சி ஒத்திவைப்பு

சாவகச்சேரி, புதன்

அறவழிப் போராட்டக் குழுவினல் ஒழுங்கு செய்யப்பட்ட பாலர் கல்வியில் ஆக்கப் பொருள் சாதனம் எனும் தலைப்பிலான பொருட்காட்சி நாட்டிலுள்ள பதற்றநிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மேற்படி குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## கொழும்பில் — விமானநிலையம், துறைமுகத்தில் இராணுவம் உஷார் நிலையில்

கொழும்பு, புதன்

கொழும்பில் விமான நிலையங்களிலும், துறைமுகத்திலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு ராணுவம் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் போராளிகள் போக்குவரத்து விமானங்களையும், துறைமுக அமைப்புகள் சிலவற்றையும் தாக்கலாமென்று அரசுக்கு கிடைத்த இரகசியத் தகவல்களையடுத்தே மேற்படி பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக கொழும்பில் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் நாளை கொழும்பில் நடைபெறவுள்ள மேதின விழாவையடுத்து கொழும்பின் பல பகுதிகளிலும் பலத்த பந்தோபஸ்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (சி)

## மாணவர் வரவு குறைவு

சாவகச்சேரி, புதன்

ஹெலிகொப்டர், பொம்மர்களின் திடீர் தாக்குதல்களால் சாவகச்சேரி நகரில் பல பாடசாலைகளில் மாணவர்களின் வரவு மிகவும் குறைவாக இருப்பதாக பாடசாலை அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

சில பாடசாலைகளில், பாலர் வகுப்புக்களுக்கான மாணவர்களைப் பெற்றோர் பாடசாலைகளுக்கு அனுப்பத் தயக்கம் காட்டுகின்றனர்.

## யாழ் பிராந்திய

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கட்டுவனில் இராணுவத்துடன் இடம்பெற்ற நேரடி மோதலுக்கு தலைமைதாங்கி முன்னணியில் நின்று போராடிய ராதா யாழ். குடாநாட்டில் பல இராணுவ முற்றுகையை முறியடிப்பதற்கு தமைதாங்கியவர் குறிப்பாக யாழ். பொலிஸ் விடுதி இராணுவமுகாம் தாக்குதலில் விடுதலைப்புலிகளின் வெற்றிக்கு தளபதி கிட்டுவிற்கு உறுதுணையாக நின்றவர் இத்தாக்குதலைத் தொடர்ந்து யாழ். பிராந்திய தளபதியாக பொறுப்பேற்றார் ராதா.

மன்னர் பிராந்தியத்தில் விக்டருக்கு துணையாக இருந்து பல தாக்குதலை வெற்றிகரமாக நடத்திய ராதா விக்டரின் மறைவுக்குப்பின் 1986-ம் ஆண்டு மன்னர் பிராந்திய தளபதியாக இருந்தவர்.

எமது இயக்கத்திலுள்ள பழைய போராளிகளை மிஞ்சக்கூடிய திறமைவாய்ந்தவர் ராதா என்று கூறும் தலைவர் பிரபாகரனின் நம்பிக்கைக்கு பாத்திரமாகத் திகழ்ந்தவர்.

ஒருபயிற்சி முகாமின் பொறுப்பாளராக இருந்த இவரின் தலைமையின்கீழ்பயிற்சி பெற்ற போராளிகள் சிறந்த வீரர்களாக இருக்கிறார்கள்

யாழ். பிராந்தியத்திலுள்ள பதினெரு இராணுவ முகாம்களையும் கட்டுப்படுத்தும் நடவடிக்கையிலும், இங்குள்ள பத்துலட்சம் மக்களை பாதுகாப்பதிலும் இரவு பகலாக அயராது உழைத்த ராதாவின் திடீர் மறைவையொட்டி நேற்று யாழ். குடாநாடு சோகத்தில் மூழ்கியது.

தெருவெங்கும், வாழைமரங்களும், கறுப்புக் கொடிகளும் தொங்கவிடப்பட்டதுடன் யாழ் நகரெங்கும் சோககீதம் இசைக்கப்பட்டது.

ராதாவின் பூதவுடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக நேற்றிரவு விடுதலைப் புலிகளின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த போது இரவு என்றும் பாராது பெண்கள் சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் அஞ்சலியை செலுத்தினர்கள். (ஒ)

## லொறி மீது ஹெலி தாக்குதல்: மூவர் காயம்

[அச்சுவேலி நிருபர்]

வல்லைப் பாலத்தில் மண் ஏற்றி வந்த இரண்டு லொறிகள் மீது நேற்றுமுன்தினம் ஹெலியிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலினல் ஒரு பெண் உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

மண் ஏற்றிவந்த இந்த லொறிகளைத் துரத்தி ஹெலி 50 கலிபர் தாக்குதல் மேற்கொண்டதால்ஒருலொறியின் ரயர்கள் சேதப்படுத்தப்பட்டன. எனினும் சாரதி அந்த லொறியை சாதுரியமாக ஓட்டி பாதுகாப்பாக கொண்டு சென்றுவிட்டார்.

## இராணுவத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்த்தாக்குதல் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலின்போது ஆறு இராணுவத்தினர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டதுடன் மூன்று இராணுவத்தினர் ரவைகள் முடிந்த நிலையில் எதிர்த்தாக்குதல் நடத்தமுடியாமல் பதுங்கியிருந்தவேளை இத்தாக்குதலில் முன்னின்று போரிட்ட கோணேஷ்இராணுவத்தைச் சரணடையுமாறு கத்திக்கொண்டு சென்றபொழுது ஹெலி கொப்டர் ஒன்று இதனை அவதானித்துவிட்டு இப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டது.

இதனல் விடுதலைப்புலி கோணேசும். மூன்று இராணுவத்தினரும் ஸ்தலத்திலே கொல்லப்பட்டார்கள்.

இத்தாக்குதலில் மட்டும் ஒன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக புலிகள் தெரிவித்தனர்.

புலிகளின் எதிர்த் தாக்குதலைத் தொடர்ந்து முன்னேற முடியாது இராணுவத்தினர் பாரிய இழப்புகளுடன் முகாம் திரும்பியதாகவும் இத்தாக்குதலின்போது ஆர்.பி. ஷெல் 14 தம்மால் கைப்பற்றப்பட்டதாகவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## அச்சுவேலியில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மேற்பட்ட வீடுகள் சேதமாக்கப்பட்டன. ஒருவான் முற்றாக நாசமாக்கப்பட்டது.

இத்தாக்குல் நடவடிக்கையில் நாலு பொம்மர்களும், 2 ஹெலிகளும் ஈடுபடுத்தப்பட்டன. தொண்டமானற்றிலிருந்து மக்கள்வாழும் இப்பகுதிகளுக்கு இராணுவத்தினர் வருவதையறிந்து பொதுமக்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறி ஓடிச்சென்றபோது பொம்மர் தாக்குதலும். ஹெலித்தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவத்தில் பாதுகாப்புத் தேடி பதுங்கு குழிக்குள் மறைந்திருந்தவர்களை நோக்கி கால்நடையாகச் சென்ற இராணுவத்தினர் ரொக்கட் லோஞ்சர் தாக்குதல் மேற்கொண்டதில் அதற்குள் இருந்தவர்கள் அனைவரும் பலியாகினர்.

இத்தாக்குதலில் சுப்பிரமணியம் [வயது 54] வளலாய், பா செல்லப்பா [வயது 76], சீனிப்பிள்ளை [வயது 78, தர்மலிங்கம் [வயது 43] தம்பர் பார்வதிப்பிள்ளை (வயது 68) ஆகியோர் இறந்தோரில் சிலராவர். மு. செல்வராசா [வயது 28] என்பவர் ஹெலித் தாக்குதலில் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானர்.

**காயமடைந்தோர் விபரம்::**

எஸ். குணபாலசிங்கம் (37 வயது அச்சுவேலி), ஆ. சிவகுமார் (27வயதுஇடைக்காடு, இராசேஸ்வரன் (24 வயது இடைக்காடு), எம். இராசகுலேந்திரன் 41 வயதுஇடைக்காடு), ச. தனபாலசிங்கம் (47 வயது கதிர்ப்பாய், மு நவரத்தினம் (36 வயது கதிப்பாய்), த.ராகநாதன்(27வயது இடைக்காடு), எஸ் சிவலிங்கம் (இடைக்காடு), கே. சிதம்பரப்பிள்ளை (இடைக்காடு), எஸ். தவமணி (50 வயது மந்திகை).

[கு-வா-அச். நிரு.]

## அபிஷேகம்

பலாலி, திங்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையிலுள்ள முருகன் கோவில் வருடாந்த சங்கா அபிஷேகம் இம்மாதம் 31-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

## புலிகள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வியா.

லெப். கேணல் ராதாவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக பொதுமக்களைப் பாதிக்கும் விதத்தில் ஹர்த்தால் கடையடைப்பு போன்ற நடவடிக்கைகளில் எவரையும் இன்று ஈடுபட வேண்டாம் என்று புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ)

## உரும்பராயில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னம் ஆகியன இத்தாக்குதலில் ஈடுபட்டன. இச்சம்பவத்தின் போது நான்கு வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

வானத்தில் பொம்பர்கள் வட்டமிடுவதைக் கண்ட இப்பகுதிமக்கள் பதுங்குகுழிகளுள் பதுங்கிக்கொண்டமையால் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படல்லை.

நண்பகல் 12-45 மணிக்கு ஆரம்பித்த முதலாவது தாக்குதல் சுமார் ஒரு மணித்தியாலம் வரை நீடித்தது. இத்தாக்குதலில் 'அவ்ரோ' விமானத்திலிருந்து பெற்றோல் குண்டுகள்வீசப்பட்டன மீண்டும்பிற்பகல 3 மணிக்கு ஹெலி தாக்குதலும் 4-20 மணிக்கு மீண்டும் ஹெலி பொம்மர் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

உரும்பிராய் இந்துக்கல்லூரி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் பாடசாலைக்கு அருகாமையில் மேற்படி விமானத் தாக்குதல் ஒரு மணி நேரம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

இப்பகுதியில் இடம்பெற்ற இரு தாக்குதலிலும் 25க்கும் மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டன. இச்சம்பவத்தையடுத்து இப்பகுதி மக்கள் பெரும் பதற்றமடைந்துள்ளனர். (சி)

## காயமடைந்தோர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 20) வறுத்தலைவிளான், செ. இரத்தினசிறி (வயது 53] குரும்பசிட்டி, பொன்னன் பாலன் (வயது 50) வறுத்தலைவிளான், கே. ராஜன் (வயது 23) குப்பிளான், எஸ். முத்துத்தம்பி (வயது 65) குரும்பசிட்டி, எஸ் சுசி (யூனியன் கல்லூரி மாணவி பி. இலங்கைநாயகம் (வயது 65) பன்னலை, செ. முத்துப்பிள்ளை (வயது 70) குரும்பசிட்டி, செ. சண்முகநாதன் (56 வயது) புன்னலைக்கட்டுவன்.

சண்முகநாதன், கலைச்செல்வி, இலங்கைநாயகம் ஆகியோர் யாழ். மருத்துவ மனையிலும் மற்றவர்கள் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

[சே]

## மரண அறிவித்தல்

### சங்கைக்குரிய சகோதரி றேமண்ட்

[திருக்குடும்ப சபை]

சங்கைக்குரிய சகோதரி றேமண்ட் மயிலிட்டி புனித சூசையப்பர் மடத்தில் 20-5-87ல் இறைவனடி சேர்ந்துவிட்டார் இவரின் நல்லடக்கம் 20-5-87 புதன்கிழமை மாலை 5 மணிக்கு மயிலிட்டியில் நடைபெற்றது

தகவல் - சகோதரி யுஸ்ரீனு

மாகாண இல்லம், யாழ்ப்பாணம். [சி 9214]

### கனகசபாபதி ஹரிச்சந்திரா

கனகசபாபதி ஹரிச்சந்திரா அகால மரணமானர் அன்னர் மு சி கனகசபாபதி காலஞ்சென்ற ஜீவரெட்ணம் தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வனும், சிவகுமாரி, ஷைலகுமார், பிரேமச்சந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சசிதான் விசாகன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிருஷனின் அன்பு மாமனும் ஆவார் அன்னரின் தகனக்கிரிகைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் மு. சி. கனகசபாபதி

15, ஓடை ஒழுங்கை
வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம். (சி 9213)

### கந்தர் வயித்திலிங்கம்

கந்தர் வயித்திலிங்கம் காலமாகிவிட்டார். அன்னர் காலஞ்சென்ற முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும், இராசையா, குருசாமி, துரைச்சாமி, இராணி, கிரேஸ் பாக்கியம், மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், வேலாயுதம், பொன்னுண்டோ, ஐயாத்துரை, வெல்ஸியா, சிவபாக்கியம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனுமாவார். ஈமக்கிரியைகள் 21-5-87 இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு ஆக்லேன் உடுவிலிலுள்ள அன்னரது இல்லத்தில் நடைபெற்று பூவோடை மயானத்தில், தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை, உற்றர், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வே. இராஜநாயகம்

(சி 9212) (மாநகர சபை, யாழ்ப்பாணம்)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு மே மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B /81 Eelanadu. P. O. Box Telegram, Eelanadu.
Telephone: — 22389 24126.